THENI-ALLINAGARAM MUNICIPALITY

News Letter

# கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம் திறப்பு விழா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.12.2013 அன்று கோடநாடு முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 64 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளை துவக்கி வைத்து, 19 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களை திறந்து வைத்து, 18 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (30.12.2013) கோடநாடு முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.



